<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>

<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>

**OS.No:** 52/2022 நாள் 09.10.2025.

வாசா.1, திரு.ஆர்.செல்லதுரை

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.**

தாவா புரோ நேட்டு ஏற்பட்ட காலத்தில் எதிர்வாதியானவர் தன் குடும்பத்தோடு சென்னையில் தான் வசித்து வந்தார் என்றும் அதே போல் சென்னையில் தான் தொழில் செய்து வந்தார் என்று சொன்னால் அது சரியல்ல. அவர் உள்ளூரில் தான் இருந்தார். தாவா புரோ நேட்டு ஏற்பட்ட காலத்தில் எதிர்வாதியானவர் என்ன தொழில் செய்துவந்தார் என்று கேட்டால் அவர் சென்னையில் மொபைல் கடை வைத்திருந்தார். எதிர்வாதியின் தகப்பனார் பாலசுப்பிரமணியன் என்னிடம் ரூ.5 லட்சத்திற்கு அடமான கடன் வாங்கிய வகையில் நான் எதிர்வாதியின் தகப்பனார் பாலசுப்பிரமணியன் என்பவரிடமிருந்து ரூ.10 லட்சத்திற்கு பதிவு அடமான ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளேன் என்றால் அது சரியல்ல. அதே மாதிரி நான் இதே பாலசுப்பிரமணியனிடமிருந்து 3 வெற்று புரோ நோட்டுகளை வாங்கியுள்ளேன் என்றால் அது சரியல்ல. அந்த 3 வெற்று புரோ நோட்டுகளில் அதில் ஒரு புரோ நோட்டை நான பயன்படுத்திக்கொண்டு என் மைத்துனர் பெயரில் மேற்படி பாலசுப்பிரமணியன் ரூ.6 லட்சத்தை கடனாக பெற்றுக்கொண்டதாக கூறி பாலசுப்பிரமணியனின் வாரிசுகளுக்கு என் மைத்துனர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா புரோ நோட்டானதை எதிர்வாதி எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றும் எந்த தொகையும் பெற்றக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. தாவா புரோ நோட்டில் உள்ள ஸ்டாம்பின் மீது உள்ள கையொப்பம் இந்த எதிர்வாதியுடையது இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. எதிர்வாதியின் தகப்பனார் ரூ.5 லட்சத்திற்கு என்னிடமிருந்து வாங்கிய அடமான கடனுக்கு அவர் ரூ.7 லட்சத்தை என்க்கு செலுத்திவிட்டார் என்று சொன்னால் அது சரியல்ல. மேலும் ரூ.1 லட்சம் கொடுக்கும் பட்சத்தில் இந்த அடமான கடனுக்குரிய ரசீதை நா்ன கொடுப்பதாக இந்த எதிரிவாதியின் தகப்பனாரிடம் நான் சொன்னேன் எ்ன்றும்அதன் அடிப்படையில் ரூ.50000 ரொக்கமாவும் மேலும் தொகை ரூ.50000 யை எதிரிவாதியானவர் அவருடைய

வங்கியில் இருந்து என் வங்கி கணக்கிற்கு அனுப்பியிருந்தார் என்றால் அது சரியல்ல. அது மட்டும் அல்லாமல் கூடுதல் வட்டி வாங்கிக்கொள்ள வேண்டி நான் எதிர்வாதியின் தகப்பனாரை மிரட்டி வந்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. எதிர்வாதியின் தகப்பனார் காலமான பின்பு நானும் மற்ற இரண்டு மூன்றுபேரும் சேரந்து ரூ.25 லட்சம் கேட்டு எதிர்வாதியானவரை மிரட்டியுள்ளேன் என்றால் அது சரியல்ல. இது தொடர்பாக எதிர்வாதியனாவர் 08.02.2022ம் தேதி தளவாய்புரம் காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தும் 15.02.2022ம் தேதி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடமும் புகார் அனுப்பியிருந்து அதற்கான ரசீதுகளை வைத்துள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல. ரூ.5 லட்சம் அந்த அடமான கடனுக்காக வேண்டி கூடுதலாக வட்டி தொகையை பெறவேண்டி தாவா புரோ நோட்டை நான் போலியாக உற்பத்தி செய்துகொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள பிராதை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 09th day of October 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.